

புற்றுநோய் குறித்த மாநாடு பற்றி இந்தோ–பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் நிறுவனர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் பேட்டி அளித்தபோது எடுத்த படம். அருகில் பிரிட்டிஷ் துணைத்தூதர் மைக் நித்தவ்ரியனாகிஸ், லண்டன் பேராசிரியர் டாக்டர் லார்டு கக்கர், டாக்டர் ஹவர்டு லியாஸ் ஆகியோர் உள்ளனர்.

# வாய் –கர்ப்பப்பை புற்றுநோயை தொடக்கத்தில் கண்டறிவது குறித்த மாநாடு

## சென்னையில் நடந்தது

சென்னை, செப்.7–

இந்தியாவில் பொதுவாக வரக்கூடிய வாய் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் ஆகியவற்றை தொடக்கத்தில் கண்டறிய என்ன வழிமுறைகளை கையாளலாம் என்பது குறித்த மாநாடு சென்னையில் நேற்று நடந்தது.

இது குறித்து இந்தோ –பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் நிறுவனத்தின் நிறுவனர் டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது:–

### பொதுவான புற்றுநோய்கள்

இந்தியாவில் பொதுவாக காணப்படும் புற்றுநோய்கள் 16. அவற்றில் வாய் புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய் ஆகியவை உள்ளன. வாய் புற்றுநோய் புகையிலையை அதிகம் பயன்படுத்துவதாலும், கன்னத்தில் ஒதுக்குவதாலும் வருகிறது. இங்கிலாந்தில் புகை அதிகம் பிடிப்பதால் நுரையீரல் புற்றுநோய் பொதுவாக உள்ளது.

புற்றுநோய்க்கு பல்வேறு நவீன சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இருப்பினும் புற்றுநோய்க்கு புதிய புதிய சிகிச்சை முறைகளுக்கான ஆராய்ச்சிகளும், புற்றுநோய் வராமல் தடுப்பதற்கும் ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

புற்றுநோயை தொடக்கத்தில் கண்டுபிடித்தால் அதை குணப்படுத்த முடியும். அதனால் தான் மிக மிக ஆரம்ப கட்டத்தில் புற்றுநோயை கண்டுபிடிப்பதற்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்தோ பிரிட்டிஷ் ஹெல்த் இனிஷியேட்டிவ் நிறுவனம் செயல்படுகிறது.

புற்றுநோய் தொடர்பாக அறிகுறிகள் தெரிந்தால் உடனே மருத்துவ பரிசோதனை செய்யவேண்டும். எதையும் அலட்சியமாக வைத்திருக்கக்கூடாது.

### மாநாடு

நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல் கிராமங்களிலும் டாக்டர்கள், நர்சுகள், தொண்டு நிறுவனங்கள் மக்கள் நலன் கருதி புற்றுநோயை ஆரம்பத்தில் கண்டறிய விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும்.

இதற்காக உலகில் சிறந்த புற்றுநோய் மருத்துவமனைகளை சேர்ந்த புற்றுநோய் நிபுணர்கள் 2 நாள் மாநாடு சென்னை ஈக்காட்டுதாங்கலில் உள்ள ஓட்டலில் தொடங்கி உள்ளது.

மாநாட்டில் இந்தியாவில் இருந்து 50 புற்றுநோய் நிபுணர்களும், இங்கிலாந்து உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் இருந்து 50 நிபுணர்களும் வந்துள்ளனர்.

இந்த மாநாட்டில் முதுகலை மருத்துவப்படிப்பு படிக்கும் ஏராளமான டாக்டர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு வினாடி–வினா நடத்தப்பட்டு சிறந்த மருத்துவர்கள் கவுரவிக்கப்படுகிறார்கள்.

### எளிதில் கண்டறிய

இந்தியாவில் பொதுவாக காணப்படும் 16 வகையான புற்றுநோய்களுக்கு இந்தியாவில் அளிக்கப்படும் சிகிச்சை குறித்தும் வெளிநாடுகளில் அளிக்கப்படும் சிகிச்சை குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மேலும் தொடக்க நிலையில் புற்றுநோயை கண்டறிவது எப்படி என்பது குறித்தும், நவீன சிகிச்சை முறைகள் குறித்தும் பேசப்பட்டது.

இவ்வாறு டாக்டர் பிருத்வி மோகன்தாஸ் பேட்டி அளித்தார்.